பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 09 2025 6.30

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கப்பல் கட்டுமானம் மற்றும் கடல்சார் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக 69 ஆயிரத்து 725 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் போனஸ் அறிவிக்கப்பட்டுள்ளது.

3. அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவதில் அனைத்துக் கட்சிகளுக்கும் ஒரே நடைமுறைதான் பின்பற்றப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. கல்வித் துறையின் வளர்ச்சியில் திமுக அரசு கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக பாரா Climbing போட்டியில் இந்தியாவின் மணிகண்டன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

கப்பல் கட்டுமானம் மற்றும் கடல்சார் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக 69 ஆயிரத்து 725 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இந்த தொகுப்பு திட்டத்தின் வாயிலாக கப்பல் கட்டுமான நிதியுதவித் திட்டம் அடுத்த 11 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு உள்ளதாக கூறினார்.

இதற்காக 24 ஆயிரத்து 736 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் கடல்சார் மேம்பாட்டு நிதியத்தை ஏற்படுத்தவும் இதில் வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கப்பல் கட்டுமான மேம்பாட்டுத் திட்டமும் 19 ஆயிரத்து 989 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த தொகுப்பு திட்டத்தின் மூலம் 30 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் 10 லட்சத்து 91 ஆயிரம் ஊழியர்கள் பயனடைவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக ஐந்தாயிரம் முதுநிலை மருத்துவப் படிப்பு இடங்களையும், 5 ஆயிரத்து 23 இளநிலை மருத்துவப் படிப்புக்கான இடங்களையும் ஏற்படுத்தவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் குழுமத்தின் திறன் மற்றும் மனித வள மேம்பாட்டுக்காக 2 ஆயிரத்து 277 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை செயல்படுத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>><><><><<

மத்திய அரசின் முக்கிய திட்டங்கள் பொது சுகாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஆயுஷ்மான் பாரத், ஊட்டச்சத்து மற்றும் தூய்மை இந்தியா இயக்கங்களின் காரணமாக நோய் பாதிப்பு குறைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மருத்துவர் ஒருவர் நாளிதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையையும் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

>><><><><<

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம் உடல் பருமன், சர்க்கரை நோய் மற்றும் கல்லீரல் நோய் சிகிச்சைக்கான மருத்துவ செலவுகள் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நாளேடு ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

இந்த நோய்களுக்கான சிகிச்சை செலவுகள் 2 லட்சம் ரூபாய் வரை குறைந்துள்ளதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவதில் அனைத்துக் கட்சிகளுக்கும் ஒரே நடைமுறைதான் பின்பற்றப்படுவதாக மாநில அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக சார்பில் நடத்தப்படும் கூட்டங்களும் காவல்துறையின் அனுமதிக்கு பின்னரே நடத்தப்படுவதாக கூறினார்.

பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அனுமதி வழங்கப்படுவதாகவும் திரு கே என் நேரு தெரிவித்தார்.

>><><><><<

அஇஅதிமுக ஆட்சி காலத்தில்தான் பட்டப்படிப்பு பயில்வோரின் எண்ணிக்கை அதிகரித்ததாக, அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று கூடலூரில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தங்கள் ஆட்சிக் காலத்தில் ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் புதிதாக ஒரு கல்லூரி கூட திறக்கப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார்.

>><><><><<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரத்தை பிஜேபி வரும் 12 ஆம் தேதி மதுரையில் இருந்து தொடங்குவதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளதாக தெரிவித்தார்.

>><><><><<

வங்கக்கடலில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>><><><><<

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகையை யொட்டி சிறப்பு விற்பனையை ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் இன்று தொடங்கி வைத்தார்.

-----------------

வேலூர் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி கைத்தறி துணிகள் 30 சதவீத சிறப்பு தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுவதாக ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

-----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற கல்விக் கடன் சிறப்பு முகாமில் 32 மாணவர்களுக்கான கடன் காசோலைகளை ஆட்சியர் திருமதி சிவசவுந்தரவள்ளி இன்று வழங்கினார்.

-----------------

நாமக்கல் மாவட்டம் எர்ணாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் வனத்துறை சார்பில் பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன்னிட்டு ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி மரக்கன்றுகளை நட்டார்.

-----------------

அரியலூர் மாவட்டத்தில் வாய்ப்புள்ள பகுதிகளில் மரங்கள் நட வேண்டியதன் அவசியத்தை ஆட்சியர் திரு ரத்தினசாமி வலியுறுத்தியுள்ளார்.

-----------------

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம் தசரா விழாவுக்காக கூடுதல் எண்ணிக்கையில் வாகன நிறுத்துமிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு இளம் பகவத் கூறியுள்ளார்.

-----------

திருச்சி மாவட்டம் குணசீலத்தில் உள்ள பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில் பிரம்மோற்சவ கொடியேற்ற விழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------

சென்னை அம்பத்தூர் தலைமை தபால் நிலையத்தில் தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ் ஊழியர்கள் இன்று தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா Climbing போட்டியில் இந்தியாவின் மணிகண்டன் வெள்ளிப் பதக்கம் வென்றார். சியோலில் நடைபெற்ற வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா ஜப்பானின் Takeru Yuzuki இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Jordan Thompson –நார்வேயின் Casper Ruud இணையை வென்றது.

----------------

டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் ஷர்மாவும், பந்துவீச்சு பிரிவில் வருண் சக்ரவர்த்தியும், ஆல் ரவுண்டர் பிரிவில் ஹர்தீக் பாண்டியாவும் முதலிடத்தில் உள்ளனர்.

----------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 51 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

பிரிஸ்பெனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா 49 புள்ளி நான்கு ஓவரில் 300 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

Vaibhav Suryavanshi மற்றும் Vihaan Malhotra தலா 70 ரன் எடுத்தனர்.

301 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா 47 புள்ளி இரண்டு ஓவரில் 249 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை முதல் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்று இந்தியா கைப்பற்றியது.

>> End of News <<